**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
முன்னிலை : **திரு T. சோழவேந்தன், B.A.,B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
2024–ம் ஆண்டு ஜனவரி மாதம் 06–ம் நாள் சனிக்கிழமை
******

**இடைமனு எண்.1/2023–ல் அசல் வழக்கு எண். 37/2022**

ராமச்சந்திரன் ..மனுதாரர்/வாதி

...எதிர்..

மாரியம்மாள் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 21.12.2023 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு S.முத்துக்குமார் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு S.கார்த்திகேயன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுதாரர்/வாதி அசல் வழக்கின் பிராதை திருத்த செய்ய அனுமதி கோரி இம்மனு உ.வி.மு.ச.கட்டளை–6, விதி–17–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர்/வாதி, பிரதிவாதி மீது பிராமிசரி நோட்டின் அடிப்படையில் அசல் தொகை மற்றும் வட்டியும் கிடைக்க கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி அசல் வழக்குரை தாக்கல் செய்யும்போது பிராது நகலில் மனுதாரர்/வாதியின் தவறுகையால் சில சங்கதிகள் தவறாக இடம்பெற்றுவிட்டது. அவற்றை திருத்தம் செய்து பிராதினை திருத்த வேண்டியது அவசியமாகவும்,

நியாயமாகவும் உள்ளது. எனவே மனுதாரர்/வாதி அசல் வழக்கின் பிராதை திருத்தம் செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.**

(i) மனுதாரர் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பாக இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் மனுவில் பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பொய் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. மனுதாரர்/வாதி தனது அசல் வழக்கில் வாதி, கீழத்தேனூர், காட்டுத்தெரு என்ற முகவரியில் வசித்து வருவதாக கூறி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். ஆனால் மனுதாரர்/வாதி தற்போது கொண்டல், அண்ணா கடைவீதி என மாற்றி அசல் வழக்கை திருத்தம் செய்ய வேண்டுமென மனு தாக்கல் செய்துள்ளார். அதற்கான காரணம் என்ன என்பதை விளக்கம் அளிக்காமல் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளது ஏற்புடையதல்ல.

(ii) மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவிலிருந்து தெரிய வருவது என்னவெனில் கொண்டல், அண்ணா வீதியில் வசித்து வந்துள்ள நபருக்கு கிடைத்த எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் பிராமிசரி நோட்டை, தனக்கு கிடைத்த பிராமிசரி நோட்டு போல் மாற்றி வழக்குமூலம் தயார் செய்து தாக்கல் செய்திருப்பது தெளிவாக தெரிய வருகிறது. ஆகையால் மனுதாரர்/வாதி அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள பிராமிசரி நோட்டிற்கு ஆதரவாக இந்த மனுவினை திருத்தம் செய்ய அனுமதித்தால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டமும் ஈடுசெய்ய முடியாத இழப்பும் ஏற்படும். எனவே மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவானது தள்ளுபடி செய்யத்தக்க மனுவாகும். அதேபோன்று மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவில் 12 (அ) வில் ரூ.78,500/- என திருத்தம் செய்ய வேண்டும் என கூறியுள்ளார். ஆனால் எதற்காக திருத்தம்

செய்ய வேண்டும் என்ற எந்த காணரத்தையும், அவசியத்தையும் கூறவில்லை. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவில் தவறாக இடம் பெற்றுவிட்டது என்பதை மட்டுமே ஏற்றுக்கொண்டு அசல் வழக்கை திருத்தம் செய்ய அனுமதித்தால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பெருத்தபாதிப்பை ஏற்படுத்தக்கூடும். எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

<u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

3. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

<u>தீர்வு:</u>

5.(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/வாதி, பிரதிவாதி மீது பிராமிசரி நோட் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் வாதி என்ற இடத்தில் வள்ளுவக்குடி அஞ்சல் என்பதற்கு கீழத்தேனூர் காட்டுத்தெரு என்பதினை நீக்கி கொண்டல் அண்ணா கடை வீதி எனவும் மற்றும் பிராதில் கண்ட தொகை என்பதற்கு ரூ.78,500/- என மனுதாரர்/வாதி அசல் பிராதை திருத்தப்பாடு செய்ய அனுமதிகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பில் அதனை மறுத்துள்ள நிலையில் மனுதாரர்/வாதி கோரும் திருத்தத்தினால் வழக்கின் தன்மையும், வழக்கு மூலத்திலும் எவ்விதமான மாறுதலும் ஏற்பட போவதில்லை.

(ii) மேலும் அசல் வழக்கில் வா.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்படாத நிலையிலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதாலும் தரப்பினர்களுக்கு போதுமான வாய்ப்பு கொடுத்து அதன் அடிப்படையில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி வழக்குரையை திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்றும், மனுவின் தன்மை கருதி

தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

முடிவில், இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு ஜனவரி மாதம் 06–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

(ஒம்/– T.சோழவேந்தன்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

இடைமனு எண்.1/2023–ல்
அசல் வழக்கு எண்.37/2022
நாள்.06.01.2024